2026 – பிப்ரவரி மாதம் 03–ஆம் தேதி செவ்வாய்கிழமை.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 295/2023*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 – ஆம் தேதி செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW 3– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. மனோரஞ்சிதம் ,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW 3, சுப்ரமணியம் |
| தந்தையார் பெயர் | : | பழனியப்பன் |
| ஊர் | : | இராமானுஜம் நகர் |
| வட்டம் | : | கரூர் |
| மாவட்டம் | : | கரூர் |
| தொழில் | : | ஜவுளித் தொழில் |
| வயது | : | 68 |

<u>**தேதி: 03.02.2026**</u>

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் இந்த மனுவில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டிய ஓட்டுநர் ஆவேன். 10.07.2023–ஆம் தேதி 9.30 மணியளவில் நான் கரூரிலிருந்து சென்னைக்கு எனது மகன் 1–ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான Volks wagen காரில் எனது தொழில் சம்மந்தமாக சென்னை செல்வதற்காக ஓட்டி சென்று கொண்டிருந்தேன். துறையூர் – சென்னை செல்லும் பெரம்பலூர் பைபாஸ் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்த பொழுது இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இரண்டு நபர்கள் வந்து கொண்டிருந்தார்கள். மேற்படி நான்கு வழி சாலை சந்திப்பில் திடீரென்று மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் சாலையை கடக்க முயன்றதில் நான் எனது வாகனத்தை பிரேக் பிடித்து நிறுத்தினேன். இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வாகனத்தை கட்டுபடுத்த இயலாமல் தடுமாறி மேற்படி இருசக்கர வாகனம் கீழே விழுந்தது. மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு சாலையின் மையப்பகுதியில்

இருந்த தடுப்பு கட்டையில் மோதியதால் காலில் காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்து இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரால்தான் ஏற்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

மேற்படி விபத்து சம்மந்தமாக நான் வேறு எந்த நீதிமன்றத்திலும் ஆஜராகி சாட்சி சொல்லவில்லை. விபத்து சம்மந்தமாக என் மீது முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்து என்னால் ஏற்படவில்லை என்றும் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரால்தான் விபத்து ஏற்பட்டது என்றும் புகார் எதுவும் காவல் நிலையத்தில் நான் கொடுக்கவில்லை. விபத்து என்னுடைய கவனக்குறைவால் மட்டுமே ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

ஒப்பம்/– கி.முரளிதரக்கண்ணன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.